ஆசிரியர் தேர்வு வாரியம் , சென்னை – 600 006

பத்திரிக்கைச் செய்தி

******

ஆசிரியர் தேர்வு வாரியம் , முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி இயக்குநர் நிலை I ற்கான தேர்வுகள் வருகின்ற 27.09.2019, 28.09.2019 மற்றும் 29.09.2019 ஆகிய தேதிகளில் காலை மற்றும் மாலை இரு வேளைகளிலும் தமிழகமெங்கும் 154 தேர்வு மையங்களில் நடைபெற உள்ளது. இத்தேர்வுகளில் சுமார் ஒரு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் (185000) நபர்கள், தேர்வு எழுத உள்ளனர், அனைத்து தேர்வுகளும் அறிவிக்கையில் தெரிவித்துள்ளவாறு கணினி வழித் தேர்வுகளாக ( CBT) மேற்கொள்ளபட உள்ளது. நாளது வரை ஒரு இலட்சத்து மூன்றாயிரம் தேர்வர்கள், தங்களது நுழைவுச்சீட்டை இணையம் வழியாக பதிவிறக்கம் செய்துள்ளனர் . பதிவிறக்கம் செய்துள்ள தேர்வர்களில் பெரும்பான்மையானவர்கள் பயிற்சித் தேர்வினை முயற்சித்து வருகின்றனர்.

கணினி வழித்தேர்வுகளைப் பொறுத்தவரை, தேர்விற்கான வினாக்கள், அவரவர்களுக்கென்று தேர்வுமையத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கணினியில் வரிசைக்கிரமமாக 1 லிருந்து 150 வினாக்களும் கணினி திரையில் வெளிப்படும். தேர்வர்கள் ஒவ்வொரு வினாவாகவோ, வரிசையாகவோ அல்லும் முன்னும் பின்னுமாகவோ தேர்வெழுத வகை செய்யப்பட்டுள்ளது. இறுதியாக உறுதி செய்தபின் விடைக்குறிப்பினை பதிவேற்றம் செய்திடவும், முழுத்தேர்வும் முடிந்தபின் இறுதியாக அனைத்து வினாக்களுக்குரிய விடைகளையும் பதிவேற்றம் செய்திடும் வகையிலும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேர்வர்களுக்கு கணினி வழித் தேர்வுகளில் முன் அனுபவம் ஏற்படுத்துகின்ற வகையில் , கடந்த 17 ம் தேதி முதல் ஆசிரியர் தேர்வு வாரிய இணைய தளத்தில் 'பயிற்சித் தேர்வுகள்' (Practice test) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கணினி வழித் தேர்விற்காக (Computer Based Examination) பயிற்சி மேற்கொள்ள விரும்பும் தேர்வர்கள் தங்களின் உள் நுழைவு மற்றும் கடவுச் சொல்லினைப் பயன்படுத்தி www.trb.tn.nic.in என்ற இணையதளத்தில் பயிற்சியினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இத்தேர்வுகளை தேர்வர்கள் தேர்விற்கு முந்தைய நாள் வரை எத்தனை முறை வேண்டுமானாலும் பயிற்சி மேற்கொள்கின்ற வகையில் 25 நிமிட தேர்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்காண் தேர்வானது எவ்வளவு கால அளவில் நிறைவு செய்யப்படுகின்றது என்பதை அறிகின்ற வகையில் கடிகாரநேரம் இறங்கு முகமாக திட்டமிடப்பட்டுள்ளது. எனவே தேர்வர்கள் தேர்வு நாளது வரை காத்திருக்காமல் ( CBT) கணினி வழித்தேர்விற்கான பயிற்சியை மேற்கொள்ள தெரிவிக்கலாகிறது.

தலைவர்

நாள்: 20.9.19.